செய்தி வெளியீடு எண் : 339 நாள் : 19.02.2023

# செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்களின் இரங்கல் செய்தி

இன்று (19.2.2023) திரைப்பட நகைச்சுவை நடிகர் திரு. மயில்சாமி (வயது 57) அவர்கள் காலமானார் என்ற செய்தி அறிந்து மிக மனவருத்தம் அடைந்தேன். திரு. மயில்சாமி அவர்கள் 100–க்கும் மேற்பட்ட படங்களில் நடித்து திரைத்துறையில் தனி முத்திரை பதித்தவராவார். மேலும் இவர் பலகுரல் மன்னராக திரைத்துறையில் பல கலைஞர்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர்.

திரு.மயில்சாமி அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், திரைத் துறையைச் சேர்ந்த நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

- - - -

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in